1991 சனவரி 25]

அணுகியவர்களுக்கு 3,995 பேர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு 4.53 கோடி ரூபாய் கடனுதவியாகவும், அதிலே 1.62 கோடி ரூபாய் மானியமாகவும் இந்தத் துறை மூலமாக வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, இந்தத் துறையில் மொத்தமாக இதுவரையில் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை? எத்தனை விண்ணப்பதாரர்கள் நிவாரணம் பெற்று இருக்கிறார்கள்? மாவட்ட வாரியாக ஏதாவது அதிலே குறியீடு கொடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த விண்ணப்பங்களில் ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு அளிக்க வேண்டுமென்று அதில் ஏதாவது குறியீடு இருக்கும். (குறுக்கீடு) அலாட்மெண்ட் என்றால்—Prescribed allotment for every district. I would like to know whether they have prescribed such allotment for every district, If so, what is the number for each district? How many applications have been fully disposed of? What is the number of beneficiaries in each district?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்ட கேள்விக்கு சரியான விளக்கங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்பார்களானால், அதற்கான முழு விளக்கமும் அளிக்கப்படும். இருந்தாலும் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பதிவு செய்து வேலை இல்லாமல் இருக்கிற பட்டதாரிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ அவ்வளவு பேர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு இந்த அரசு மூலமாக ஒரு ஆண்டிற்கு ஏழு கோடி ரூபாய்க்கு மேலாக மானியத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு பேர் மனு செய்திருக்கிறார்கள் என்ற விவரத்திற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

பெரியார் பெயரில் கோட்டம் அமைத்தல்.

* 11646—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைந்துள்ளது போல், சமுதாய சீர்திருத்தச் செம்மல் பெரியார் பெயரில் ஒரு கோட்டம் அமைக்க அரசு முன்வருமா?

[1991 சனவரி 25

மாண்புமிகு திரு. சே. என். நேரு : தலைவர் அவர்களே, பெரியார் பெயரில் கோட்டம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, கல்லணை கட்டிய கரிகால் சோழனுக்குப் பிறகு, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ராஜராஜ சோழன் தோன்றி அவர் பெரிய சிறப்பை உருவாக்கி, அதற்கு பிறகு ராஜேந்திர சோழன் உருவாகி வீரத்தை உருவாக்கினான். அதற்குப் பிறகு, ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு குலோத்துங்க சோழன் தோன்றி அன்பு, தயவு, தர்மம், தாட்சண்யம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சகோதரபாசம் குறைந்துவிட்டது என்று எண்ணி கம்ப இராமாயணத்தை உருவாக்கினான். அதன் பிறகு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா, இந்த இலக்கிய வரலாறெல்லாம் எனக்கும் கொஞ்சம் தெரியும். இப்போது என்ன சொல்ல வருகிறீர்கள் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, அவர் அவன், இவன் என்று ஏகாரம் போட்டுப் பேசுகிறார். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவைக் கொஞ்சம் மரியாதையாகக் கேட்கச் சொல்கிறார். (சிரிப்பு).

திரு. எம். முத்தையன்: குலோத்துங்கர் அல்ல. குலோத்துங்கன் என்று தான் பெயர். அதன் பிறகு நம்முடைய தலைவர் அவர்கள், வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கி, ஆங்காங்கே இருக்கிற பெரும் புலவர்கள், கலைஞர்கள் மத்தியிலே இருந்த வள்ளுவர் குறளை, சாதாரண மக்கள் மத்தியிலே பரப்பினார்கள். அதன் பிறகு. "ஆற்ற கலை நூற்றொருவர், ஆயிரத்தொன்றாம் புலவர் வார்த்தை பதினாயிரத்தில் ஒருவர், பூத்தமலர் தண்டாமரத் தருவே தாதாகோடிப் பெறுவர்" என்பதைப் போல, அடிக்கடி, உயர்ந்தவர்கள் தோன்றுவது கிடையாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு, 500 ஆண்டுகளுக்கு, 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்ந்த மனிதன் தோன்ற முடியும். எனவே, இவரால்தான் பெரியார் கோட்டம் அமைக்க முடியும். அப்படிப்பட்ட மிகப் பெரிய பெரியாருக்கு—நாம் எல்லாம் இங்கே உட்கார்ந்து இருப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடிய பெரியாருக்கு—ஒரு சிறப்பான கோட்டத்தைக் கட்டி, வள்ளுவருக்கு எவ்வளவு பெரிய சிறப்பைச் செய்து இருக்கிறார்களோ, அதேமாதிரி நம்முடைய அரசு, நம்முடைய தலைவர் செய்வார்களா என் எதிர்பார்க்கிறேன். கேட்கிறேன்

1991 சனவரி 25]

9–55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரை எதிலே தான் அடங்குகிறது என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கூற்றோடு, எள் அளவும் மாறுபடாமல், நாங்களும், அதை ஒத்துக் கொள்கிறோம். அதற்கு எதிர்ப்பு இல்லை. தந்தை பெரியார் அவர்களுக்குப் பல்வேறு புகழ்களை நாம் தேடித் தந்திருக்கிறோம். பெரியார் அவர்கள் பெயரால் மாவட்டத்தை அமைத்திருக்கிறோம். பெரியார் அவர்கள் பெயரால், பல்வேறு கட்டிடங்களை கட்டி, பெயர் சூட்டியிருக்கிறோம். ஈரோட்டில் பெரியார் அவர்களுக்கு நினைவகங்களை அமைத்திருக்கிறோம். சென்னையில் தந்தை பெரியார் அவர்களுக்கு பெரியார் மாநாட்டு அரங்கம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. பெரியார் மாநாட்டு அரங்கம் கிரீன்வேஸ் சாலையும், காமராஜ் சாலையும் சந்திக்கும் இடத்தில், மீன்வளத்துறை வசம் உள்ள 18 ஏக்கர் நிலத்தையும் அந்த நிலத்தை ஒட்டியுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் முழுவதையும் பெரியார் மாநாட்டு அரங்கம் அமைக்க ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று முன்னர் முடிவு எடுக்கப்பட்டது. மேற்கண்ட இடங்கள் வெவ்வேறு துறைக்கு, வெவ்வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டு உள்ளன. எனவே, பெரிய மாநாட்டு அரங்கம் அமைக்க வேறு ஒரு இடத்தை தேர்வு செய்ய அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தோடு இந்த அரசினுடைய கருத்தும் ஒத்துத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையன் : தலைவர் அவர்களே, எத்தனையோ நல்ல நல்ல காரியங்கள் அவர்களுடைய பெயரால் நடந்திருக்கின்றன. இருந்தாலும், தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்திற்கு இணையாக நாம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் அறிவியல் தொழில் நுட்பக் காட்சி மையம் ஒன்று 8 கோடி ரூபாய் அளவில் திட்டமிடப்பட்டு, 4 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகி, சென்னை கோட்டூர் பகுதியிலே மிகப் பெரிய அளவில் அமைந்திருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.